1376

# தமிழ்நாடு குற்றவாளிகளின் நன்னடத்தை விதிகள், 1962

(மையச் சட்டம் எண் 20, 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டது.)

©
தமிழ்நாடு அரசு
1982

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

விலை: ரூ. 1,70 பை.

# தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தை விதிகள், 1962

*(மையச் சட்டம் எண் 20, 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டது.)*

மொழிபெயர்ப்பாளர் : இல. பழனியப்பன், எம். ஏ.

கூர்ந்தாய்வாளர் : திரு. சி. செல்வராஜ், எம். ஏ.

உதவி இயக்குநர் (மொழிபெயர்ப்பு),
தமிழ் வளர்ச்சித் துறை.

# தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தை விதிகள், 1962.

(மையச் சட்டம் எண் 20, 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டது.)

(அரசு ஆணை எண் 3699, உள்துறை, 1962 நவம்பர் 2-ம் நாளிட்டது.)

எஸ். ஆர். ஓ. எண் 1969, 1962 ஆம் ஆண்டுக்குரியது.

குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 (1958 ஆம் ஆண்டு மையச் சட்டம் 20).

17-வது பிரிவு துணைப் பிரிவுகள் (1) மற்றும் (2)-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு ஆளுநர், துணைப் பிரிவு (3) இல் கண்டுள்ள வாறு முன்னதாக வெளியிட்டபடி கீழ்க்கண்ட விதிகளைக் கொண்டு வருகிறார் :—

## விதிகள்.

1. **தலைப்புச் சுருக்கம்.**—தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தை விதிகள், 1962 என்று இவ்விதிகள் அழைக்கப்படும்.

2. **விளக்கம்.**—இந்த விதிகளில் சூழ்நிலைத் தொடர்பாகத் தேவைப் பட்டாலொழிய—

(அ) 'சட்டம்' என்பது தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 (1958 ஆம் ஆண்டு மையச் சட்டம் 20) என்று பொருள்படும்.

(ஆ) ' தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ' என்பது தமிழ கத்திலுள்ள நன்னடத்தை அலுவலர்களின் பணியை மேற்பார்வையிட மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஓர் அலுவலர் என்று பொருள்படும்.

(இ) ' படிவம் ' என்பது விதிகளுக்குப் பிற்சேர்க்கை செய்யப்பட்ட ஒரு படிவம் எனப் பொருள்படும்.

(ஈ) ' சிறப்பு நன்னடத்தை அலுவலர் ' என்பது மாநில அரசால் பிரிவு 13, உட்பிரிவு (1) இன் கூறு (1) இன்படி அங்கீகரிக்கப்பட்ட ஒரு

நன்னடத்தை அலுவலர் அல்லது சட்டத்தின் 13 ஆவது பிரிவின் உட்பிரிவு (1)-ல் கூறு ( ii )-இன் கீழ் ஒரு சமூகத்தால் அளிக்கப்பட்டு மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(உ) 'துறைத் தலைவர்' என்பது சிறைத்துறைத் தலைவர் என்று பொருள்படும்.

(ஊ) 'நீதிபதி' என்பது மாநில நீதிபதி, மாவட்ட நீதிபதி, சென்னை மாநகரத்தில் தலைமைக் குற்றவியல் நீதிபதி உள்பட ஆகியோரைக் குறிக்கும்.

(எ) 'நன்னடத்தைப் பகுதி' என்பது ஒரு மாவட்டத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியையும் அப்பகுதியில் சட்டத்தின் வழிவகைகளைச் செயல்படுத்த நியமிக்கப்பட்ட ஒரு ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரையும் குறிக்கும்.

(ஏ) 'ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர்' என்பது பிரிவு 13, உட்பிரிவு (1), கூறு (அ)-வின் முதல் பகுதியின் கீழ் மாநிலத்திற்குள் உள்ள அப்பகுதி நன்னடத்தைப் பணிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர் என்றும் அரசின் சட்டத்தால் அவ்வப்பொழுது தமிழ்நாடு ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட நன்னடத்தை அலுவலர் என்றும் பொருள்படும்.

(ஐ) 'நன்னடத்தையாளர்' என்பது மேற்பார்வை ஆணையின் கீழ் மேற்பார்வை தேவைப்படும் ஒரு குற்றவாளி என்று பொருள்படும்.

(ஒ) 'மண்டல நன்னடத்தை அலுவலர்' என்பது ஊதியம் பெறும் சிறப்பு மற்றும் தனி நன்னடத்தை அலுவலர்களின் பணியை மேற்பார்வையிட குறிப்பிட்ட பகுதிக்காக மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஓர் அலுவலர் என்று பொருள்படும்.

(ஓ) 'சிறப்பு நன்னடத்தை அலுவலர்' என்பது பிரிவு 13ன், உட்பிரிவு 1-ன் கீழ், கூறு (இ)-ன்படி நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட ஒரு நன்னடத்தை அலுவலர் என்று பொருள்படும்.

3. சிறைத்துறைத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்.—இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுமைக்கும் நன்னடத்தைப் பணி முழுமையின் பொது நிருவாகமும் மேற்பார்வையும் சிறைத்துறைத் தலைவரின் அதிகாரத்தின் கீழ் இயங்கும்.

**4. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்.**—(1) சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்கும் மற்றும் மேற்பார்வைக்கும் உட்பட்டு மாநிலம் முழுமைக்குமுள்ள நன்னடத்தைப் பணிகளை வழிகாட்டி நடத்தி மேற்பார்வையிட்டு நன்னடத்தைப் பணிகள் முறையாக நடைபெற தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் தமது பணியின் மூலம் உதவி செய்வார்.

(2) குற்றம் செய்தவர்களின் மறுவாழ்வுத் திட்டம் ஒழுங்காக நடைபெற பின் கவனிப்புப் பணிகளை பார்வையிட்டு மாநிலம் முழுமைக்கும் இப் பணிகளை ஒருங்கிணைப்பதுடன் இது தொடர்பான பொது மக்களிடமும், இதர அமைப்புகளிடமும் அவர் தொடர்பு வைத்துக் கொள்வார்.

(3) நன்னடத்தை அலுவலர்களின் பணி மற்றும் நடத்தை பற்றிய அறிக்கைகளை ஆண்டுக்கு இருமுறையும் மற்றும் சிறைத்துறைத் தலைவர் குறிப்பிடும் நாட்களிலும் சிறைத்துறைத் தலைவருக்குத் தாக்கல் செய்வார்.

(4) மாநில அரசு அல்லது சிறைத்துறைத் தலைவரால் குறிப்பிடப் பட்டுள்ளபடி அவ்வப்பொழுது தேவைப்படும் புள்ளி விவரங்களையும் மற்றும் நன்னடத்தை முறை செயல்படும் முறை பற்றிய ஆண்டு அறிக்கையையும் தாக்கல் செய்வார்.

(5) நன்னடத்தை அலுவலர்கள் அளிக்கும் செலவினங்களின் பற்றுச் சீட்டுகள் முதலியவற்றை பரிந்துரைத்து அனுமதிக்கும் அதிகாரியாக இவர் விளங்குவார்.

(6) மாநில அரசு மற்றும் சிறைத்துறைத் தலைவரால் ஒப்படைக்கப் படும் அல்லது உத்திரவிடப்படும் இதர பணிகளையும் உத்திரவுகளையும் இவர் நிறைவேற்றுவார்.

**5. மண்டல நன்னடத்தை அலுவலரின் அதிகாரங்களும் பணிகளும்:—**

**மண்டல நன்னடத்தை அலுவலர்—**

(அ) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியின் நன்னடத்தைப் பணிகளுக்குப் பொறுப்பாளியாவார்.

(ஆ) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட நன்னடத்தை அலுவலர்களின் பணியினை மேற்பார்வையிடுதல் மற்றும் வழிகாட்டுதல் செய்வார்.

(இ) விதி 24 (1) (அ) இன்படி ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர்களின் நாள் குறிப்பை மதிப்பீடு செய்து தன் குறிப்போடு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைப்பார்.

(ஈ) மாநில அரசு அல்லது சிறைத்துறைத் தலைவர் அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் "ஆகியோரால்" அவ்வப்பொழுது ஒப்படைக்கும் பிற வேலைகள்.

(உ) சிறைத்துறைத் தலைவர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அல்லது மாநில அரசால் குறிப்பிடப்படும் பிற அறிக்கைகளைத் தயார் செய்து சிறைத்துறைத் தலைவர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மாவட்ட நீதிபதி மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பார்.

**6. நன்னடத்தை அலுவலர்களின் தலைமையகங்கள்.**—ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரின் தலைமையகம் சாதாரணமாக நன்னடத்தைப் பகுதியின் தலைமையகமாக இருக்கும். ஆனால் மாவட்ட நீதிபதியின் ஆலோசனையோடு சிறைத்துறைத் தலைவர் வேறு இடத்தையும் தலைமையகமாக முடிவு செய்யலாம்.

**7. மண்டல நன்னடத்தை அலுவலரின் தலைமையகம்.**—மாநில அரசின் அங்கீகாரத்துடன் மண்டல நன்னடத்தை அலுவலரின் தலைமையகம் சிறைத்துறைத் தலைவரால் முடிவு செய்யப்படும்.

**8. ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலருக்கான தகுதிகள்.**—(1) 13 ஆவது பிரிவின்படி கீழ்க்கண்ட தகுதியுடையவர்கள் மட்டுமே ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலராக நியமனம் செய்யப்படத் தகுதி வாய்ந்தவராவார்கள்.

பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிலிருந்து பெற்ற இளங் கலை அல்லது இளம் அறிவியல் பட்டம்—

(அ) சமூகவியல் அல்லது உளவியலில் பட்டம் ;

(ஆ) சமூகவியல் அல்லது உளவியல் அல்லாத பாடங்களில் பட்டம் பெற்று சமூகவியல் அல்லது உளவியலில் கூடுதல் பட்டயம் பெற்றவர்கள் ;

(இ) ஓராண்டுக்குக் குறையாமல் சமூகப் பணி ஆற்றியவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

(2) முதல் நியமனத்தில் 25 வயது பூர்த்தி செய்தவர்களாகவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் உள்ளவர்கள் மட்டுமே ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலராக நியமனம் செய்யத் தகுதி வாய்ந்தவர்கள்.

1969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாளிட்ட உள்துறை அரசு ஆணை எண் 3142-ன்படி 25 வயது என்பது 22 ஆக மாற்றப்பட்டிருக்கிறது.

(3) மதிப்புறு நன்னடத்தை அலுவலர் மற்றும் தனி நன்னடத்தை அலுவலர்.—கீழ்க்கண்ட தகுதியுடையவர்கள் மட்டுமே மதிப்புறு நன்னடத்தை அலுவலர் அல்லது தனி நன்னடத்தை அலுவலராக நியமனம் செய்யத் தகுதி பெற்றவர்களாவர் :—

(i) 25 வயது பூர்த்தியானவர்கள் மற்றும் முதல் நியமனத்தில் 50 வயது பூர்த்தியாகாதவர்கள்.

(ii) மேற்பார்வையில் இருக்கும் குற்றவாளிகளை வழி நடத்திச் செல்லும் ஆளுமை, பயிற்சி, கல்வி மற்றும் நன்னடத்தையுடையவர்கள்.

(iii) குற்றவாளிகளை மேற்பார்வையிடப் போதுமான நேரத்தை ஒதுக்கும் நிலையிலுள்ளவர்கள்.

(iv) மாவட்டத்தில் அல்லது நன்னடத்தையாளர்களின் இல்லத்திற்கு அருகாமையில் வசிப்பவர்கள்.

(v) ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

(vi) இச்சட்டம் மற்றும் விதிகளில் நல்ல தேர்ச்சியுடையவர்கள், மற்றும்

(vii) வாகன வசதியோ அல்லது போக்குவரத்து உதவித் தொகையோ கோராமல் மேற்பார்வைப் பணி செய்ய விருப்பமுடையவர்கள்.

9. மண்டல நன்னடத்தை அலுவலர்களின் நியமனம்.—ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர்களிலிருந்து பதவி உயர்வின் வாயிலாக மண்டல நன்னடத்தை அலுவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இந்தப் பதவி உயர்வு தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். தகுதியும் திறமையும் சமமாக இருக்கும்போது மட்டும் பணிமூப்பு, கணக்கில் எடுக்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கப்படும்.

10. மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் நியமன அங்கீகாரம்.—(அ) மாவட்டங்களில் மாவட்ட நீதிபதியின் ஆலோசனையோடும், நகரங்களில் தலைமைக் குற்றவியல் நீதிபதியின் ஆலோசனையோடும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர், சிறைத்துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு தான் நியமிக்க இருக்கும் மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் பட்டியலைப் பணிந்தனுப்புவார். தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரிடம் இருக்கும் பதிவேட்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் பெயர், முகவரி பதிவு செய்யப்படும்.

(ஆ) (1) மாநில அரசால் நியமனம் செய்யப்பட்ட நன்னடத்தை அலுவலர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல்.

(2) மாவட்டங்களில் அல்லது மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதியில் அல்லது மாவட்டத்தின் குறிப்பிட்ட நீதி மன்றங்களில் பணிபுரிய நியமிக்கப்பட்ட மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல், மண்டல நன்னடத்தை அலுவலரால் தயாரித்து வைக்கப்பட்டு தேவைப்படும் பொழுது நீதி மன்றங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

11. (1) அடையாள அனுமதி அட்டை.—நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் அரசின் செலவில் படிவம் எண் 1-ல் அடையாள அனுமதி அட்டை வழங்கப்படும். நன்னடத்தை அலுவலர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டாலோ, பணியிலிருந்து நின்றுவிட்டாலோ மேற்படி அட்டை பொது ஆய்வாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

(2) நன்னடத்தை அலுவலர்கள் சீருடை அல்லது அடையாள வில்லை அணியமாட்டார்கள்.

12. மதிப்புறு நன்னடத்தை அலுவலருக்கான அறிவுரைகள்.—ஒவ்வொரு மதிப்புறு நன்னடத்தை அலுவலரிடமும் ஒரு குறிப்பிட்ட பணி ஒப்படைக்கப்படும்பொழுது—

(1) அந்தப் பகுதியில் ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரால், அவரின் பணி, கடமை பற்றிய விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

(2) ஒவ்வொரு காலாண்டுப் பகுதியிலும் திரும்பக் கிடைக்கப் பெறுமாறு படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் அந்தப் பகுதி ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரால் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

(3) இச்சட்ட விதிகளின் படிகளும் மற்றும் ஆங்கிலம் அல்லது தமிழில் அச்சடிக்கப்பட்ட அறிவுரைகளின் படிகளும் அளிக்கப்படுகின்றன.

13. மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் வேலையிலிருந்து விலகுதலும், உடல்நலக் குறைவும்.—தன் வேலையிலிருந்து விலக நினைக்கும் ஒவ்வொரு மதிப்புறு நன்னடத்தை அலுவலரும் குறைந்த அளவு ஒரு மாத முன்னறிவிப்பாவது எழுத்து மூலம் கொடுக்கவேண்டும். உடல்நலக் குறைவு அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் பணியாற்ற இயலாத சமயம் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு அவர் உடனடியாகத் தகவல் தெரிவித்தால் அவர் அத்தகவலை சிறைத்துறைத் தலைவருக்கும் மற்றும் மாவட்டத்திலுள்ள இதர நீதி மன்றங்களுக்கும் தெரியப்படுத்துவார்.

**14. நன்னடத்தை அலுவலர் பணியிலிருந்து நிற்கும்பொழுது அறி விப்புகள்.**—நன்னடத்தை அலுவலர் ஒருவர் பணியிலிருந்து நின்றுவிட நினைத்தாலோ அல்லது நின்றுவிட்டாலோ சிறைத்துறைத் தலைவர் தொடர்புடைய எல்லா நீதி மன்றங்களுக்கும் அறிவிப்பாகத் தெரியப்படுத்துவார்.

**15. ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் மற்றும் மண்டல நன்னடத்தை அலுவலர் விடுப்பின் காரணமாக வேலை செய்யாத நிலைமை.**—மண்டல நன்னடத்தை அலுவலர், ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலருக்கும், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மண்டல நன்னடத்தை அலுவலருக்கும் தற்செயல் விடுப்பு வழங்கலாம். மற்ற விடுப்புக்கள் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மூலம் சிறைத்துறைத் தலைவரால் வழங்கப்படும்.

**16. பெண் நன்னடத்தையாளர்களை, பெண் நன்னடத்தை அலுவலர்களின் பார்வையில் ஒப்படைத்தல்.**—பெண் நன்னடத்தை அலுவலர்கள் இருக்கும் இடத்திலும், பெண் நன்னடத்தை அலுவலர்களின் பார்வையில் பெண் நன்னடத்தையாளர்களைப் பார்வையிட நியமிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களிலும் பெண் நன்னடத்தை அலுவலர்களின் பார்வையின் கீழ் பெண் நன்னடத்தையாளர்கள் ஒப்படைக்கப்படுவார்கள்.

**17. நன்னடத்தை அலுவலர்களின் பணிகள்.**—ஒரு நீதிமன்றம் ஆணையிடும்பொழுது நன்னடத்தை அலுவலர் தவறு செய்தவர்களின் குடும்பச் சூழல், சமுதாயப் பின்னணி உள்ளிட்ட இக்குற்றம் செய்ததற்கான சூழலுடன் அமைந்த தொடக்க விசாரணையை மேற்கொள்வார்.

(2) நீதி மன்றத்திற்கு தேவைப்படுகின்ற தகவல்களையும் அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அல்லது சிறைத்துறைத் தலைவருக்குத் தேவைப்படும் தகவல்களையும் உள்ளிட்ட தொடக்க விசாரணை அறிக்கை எழுத்து மூலம் தயாரித்தல்.

(3) நன்னடத்தையாளரின் நலனை முன்னிட்டு தன் விசாரணை தொடர்பான தகவல்களையோ அல்லது நன்னடத்தைப் பணியைப் பற்றியோ வெளிக் கொணரக் கூடாது.

(4) நன்னடத்தை அலுவலர் ஆணையின் தன்மைகளை எச்சரிக்கை மூலமோ, பின்தொடர்தல் மூலமோ புரிந்துகொள்ளச் செய்துள்ளதைக் கண்டறிவார். மேலும் தவறு செய்தவர்கள் எந்த நிபந்தனைகளையும் மதிக்கத் தவறும்பொழுது அவற்றைப் பற்றி அறிக்கை தாக்கல் செய்வார்.

(5) அனைத்து நன்னடத்தை அலுவலர்களும் மேற்பார்வை ஆணை, நீதிமன்றத் தாக்கீது மற்றும் சிறைத்துறைத் தலைவர் அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தாக்கீதுப்படி தவறு செய்தவர்களின் இல்லத்தைப் பார்வையிட்டு அவர்களின் நடத்தை, வாழ்க்கை முறை மற்றும் பணி பற்றிய விசாரணையை மேற்கொள்வார். நன்னடத்தை அலுவலர் சிறைத்துறைத் தலைவர் மற்றும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நன்னடத்தைக் கால முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையாவது தொடர்பு வைத்துக் கொள்வார். அதைத் தொடர்ந்து அவர்களைப் போய்ச் சந்தித்தால் நன்னடத்தையாளரின் வாழ்க்கை முறை மற்றும் நடத்தையின் அடிப்படையில் அமையும். 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட நன்னடத்தையாளர்களைப் பொறுத்தவரை 15 நாட்களுக்கு ஒரு முறையும், மற்றவர்களைப் பொறுத்தவரை மாதம் ஒரு முறையும் அமையும்.

(6) பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களைப் பொறுக்க வரை நன்னடத்தை அலுவலர்கள், அவர்களின் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் வருகை மற்றும் முன்னேற்றம்" ஆகியவற்றைக் கண்டறிவர். ஆனால் பள்ளிக் கட்டடத்திற்கு நேரடியாகப் போய் அவர் களைப் பார்க்கமாட்டார்கள்.

(7) தானே அல்லது நீதிமன்ற ஆணைப்படி தன்னை வந்து பார்க்கும் நன்னடத்தையாளர்களை நன்னடத்தை அலுவலர் வரவேற்பார். வரவேற்கும் நேரமும் இடமும் நன்னடத்தையாளர்களுக்கு தொல்லையில்லா வண்ணமும், தனிமையாகவும் மற்ற நன்னடத்தையாளர்களுடன் சேரா வண்ணமும், நன்னடத்தை அலுவலரால் ஏற்பாடு செய்யப்படும்.

(8) நன்னடத்தையாளரின் நடத்தையைப் பொறுத்து பத்திரத்தின் தன்மைகளைக் கடுமையாக்குதல் அல்லது தளர்த்துவதை நீதிமன்றம் மூலம் நன்னடத்தை அலுவலர் மேற்கொள்வார்.

(9) சட்டத்தில் 8 (3) ஆவது பிரிவின்படி நன்னடத்தையாளர் போதிய முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், மேற்கொண்டு மேற்பார்வை இனித் தேவையில்லை என்றும் கருதினால், பத்திரத்தின் தன்மைகளை மாற்ற நீதி மன்றத்திற்கு நன்னடத்தை அலுவலர் விண்ணப்பிப்பார்.

(10) நன்னடத்தையாளர் பத்திரத்தில் கண்டபடி உள்ள தன்மைகள் ஏதேனும் பின்பற்றத் தவறி மேற்பார்வை நோக்கத்தினை தோற்கடிக்கச் செய்யும் விதத்தில் நடந்து கொண்டால் தேவையான மேல்நடவடிக்கைக்காக இந்தத் தகவலை நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிபதிக்கு நன்னடத்தை அலுவலர் தெரியப்படுத்துவார்.

(11) சட்டத்தின் 11-வது பிரிவின்படி முறையீடு அல்லது மறு பரிசீலனையைப் பொறுத்தவரை நன்னடத்தை அலுவலர் மண்டல நன்னடத்தை அலுவலரைக் கலந்து ஆலோசிப்பார்.

**18. நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கை.**—(1) நீதி மன்ற உத்திரவின் படி தனி அல்லது மதிப்புறு நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பிலும் மேற் பார்வையிலும் தவறு செய்த ஒருவர் இருக்கும்பொழுது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவரைப் பற்றிய அறிக்கையை படிவம் II ல் ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலருக்கு தாமதமின்றி தாக்கல் செய்வார். ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் தனி அல்லது மதிப்புறு நன்னடத்தை அலுவலரிடமிருந்து பெற்ற அறிக்கையினை நன்னடத்தைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்வார்.

(2) நன்னடத்தையாளரின் நடத்தை, வாழ்க்கைமுறை மற்றும் பொது முன்னேற்றம் பற்றிய அறிக்கையை நீதிமன்றத்திற்கு ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படியும் மற்றும் பத்திரத்திலுள்ள தன்மைகளின் படியும் தாக்கல் செய்வார். அறிக்கைகளின் படிகள் மற்றும் தனி மற்றும் மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கைகளின் படிகள் தொடர்புடைய மண்டல நன்னடத்தை அலுவலருக்கு அனுப்பப்படும். இந்த அறிக்கைகளைப் பெறும் நீதிமன்றம் அவற்றை மாதம்* ஒரு முறை தொடர்புடைய மாவட்ட நீதிபதிகளின் குறிப்புக்காக அனுப்பி வைக்கும்.

(3) நீதிமன்றம் ஆணையிட்டால் மட்டுமே மாதம் ஒரு முறை மேற் கண்ட அறிக்கை தயாரிக்கப்படும். அவ்வறிக்கைகள் திறந்த நீதி மன்றத்தில் தயாரிக்கப்படவோ, வெளியிடப்படவோ கூடாது.

(4) பத்திரத்தில் கண்டுள்ள கட்டுவரம்புகளை ஒரு நன்னடத்தையாளர் பின்பற்றத் தவறினால் உடனடியாக நீதிமன்றத்துக்கும் மேற்படி நன்னடத்தையாளர் கட்டுப்படுத்தப்பட்ட பத்திரத்திற்கும் மற்றும் மாவட்ட நீதிபதிக்கும் நன்னடத்தை அலுவலர் தெரியப்படுத்துவார். தனி அல்லது மதிப்புறு நன்னடத்தை அலுவலர் அத்தகைய அறிக்கையின் படி ஒன்றை அந்தப் பகுதியின் ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலருக்கு அனுப்பிவைப்பார்.

(5) தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு கீழ்க்கண்ட அறிக்கைகளை ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் அனுப்பி வைப்பார் :—

(அ) மேற்பார்வைக் காலம் முடியும் வரை உள்ள காலத்திற்கான நடத்தை மற்றும் அவரின் முன்னேற்றம் பற்றிய இறுதி அறிக்கை.

* அரசு ஆணை நிலை எண் 2776, உள்துறை, நாள் 30—9—1967.

(ஆ) மாநில அரசால் அவ்வப்பொழுது குறிப்பிடப்படும் அறிக்கைகள்

குறிப்பு.—உள் விதி (5) இல் கூறு (அ) நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக கூறுகள் (ஆ) மற்றும் (இ), கூறுகள் (அ) மற்றும் (ஆ)-வாக மறு எண்ணிக்கை செய்யப்படும்.

(6) இதற்கு மேலாக சிறைத்துறைத் தலைவர் அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் தேவையான சிறப்பு அறிக்கைகளை எந்த நோக்கத்திலும் எந்த நன்னடத்தையாளரைக் குறித்தும் கேட்கலாம்.

19. நன்னடத்தையாளர்களின் மறுவாழ்வு மற்றும் பின் பாதுகாப்பு.— மீண்டும் குற்றம் செய்யாவண்ணம் இருக்க நன்னடத்தையாளர்களின் சமுதாய மறுவாழ்வுக்கு வேண்டிய உதவிகளை நன்னடத்தை அலுவலர் மேற்கொள்வார். கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மூலம் இந்நோக்கம் நிறைவேற நன்னடத்தை அலுவலர் ஏற்பாடு செய்வார்.

(1) (அ) பயிற்சி வசதிகள்,

(ஆ) வேலை வாய்ப்புகள்,

(இ) தேவையான நிதி உதவி, மற்றும்

(ஈ) ஆண் சாரணரியக்கம், பெண் வழிகாட்டி போன்ற அமைப்புக்கள் மூலம் சாதாரண மனிதர்களிடம் தொடர்பு ஏற்படுத்துதல்.

(2) தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரால் குறிப்பிடப்பட்ட காலம் வரை, விடுவிக்கப்பட்ட நன்னடத்தையாளர்களிடம் அடிக்கடி தொடர்பு கொண்டு அவர்கள் மறுவாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நன்னடத்தை அலுவலர்கள் பின் கண்காணிப்புச் செய்வர்.

20. நன்னடத்தை அலுவலர்களின் மற்ற பணிகள்.—நன்னடத்தை அலுவலர் கீழ்க்கண்ட பணிகளையும் மேற்கொள்வார் :—

(1) பொது மக்களை கல்வியறிவு பெறச் செய்து நன்னடத்தை முறைக்கு மக்கள் ஆதரவைத் திரட்டுதல்.

(2) சமூக நற்காப்புத் துறையில் பொது மக்கள் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பைத் திரட்டுதல்.

(3) விதி 31-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது இதர பகுதிகளுக்கு பொறுப்பாளராக இருத்தல்.

(4) மாநில அரசின் ஆணையின்படி ஒப்படைக்கப்படுகிற இதர பணிகள்.

**21. நீதிமன்ற நடைமுறை.**—படிவம் III-ல் குற்றம் சாட்டப்பட்டவரின் நடத்தை, முன் நிகழ்ச்சிகள் மற்றும் குற்றம் செய்த சூழல் போன்றவற்றை விசாரித்து குறித்த காலத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படி நன்னடத்தை அலுவலரை நீதிமன்றம் கேட்டுக் கொள்ளலாம். அந்த அறிக்கை சாதாரணமாக நீதி வழங்கும் நாளன்று அளிக்கப்பட வேண்டும். நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று கண்டுபிடித்தால் மட்டுமே இந்த அறிக்கையை கலந்து ஆலோசிக்கும். அவ்வாறு இல்லையென்றால் தொடர்புடைய நன்னடத்தை அலுவலருக்கு எதிர்காலப் பார்வைக்காகத் திரும்ப அனுப்பப்பட வேண்டும்.

(2) சட்டத்தின் 3, 4, 5, 6 அல்லது 7 ஆவது பிரிவின்படி விசாரணையைத் தொடர்ந்து மேல் விசாரணை செய்யவும் குற்றம் செய்தவரை மருத்துவம் மற்றும் உளவியல் சோதனைக்கு அனுப்பும்படியும் நீதிமன்றம் நன்னடத்தை அலுவலரைக் கேட்டுக் கொள்ளலாம்.

**22. படிவங்கள்.**—ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிட்டுள்ளபடி கீழ்க்கண்ட படிவங்களைப் பயன்படுத்தலாம்.

(அ) படிவம் IV — சட்டத்தின் 4 (1) பிரிவின்படி நன்னடத்தைக்கான பத்திரம்.

(ஆ) படிவம் V — சட்டத்தின் 4 (3) பிரிவின்படி மேற்பார்வை உத்திரவு.

(இ) படிவம் VI — சட்டத்தின் 4 (4) பிரிவின்படி நன்னடத்தையாளர் மேற்கொள்ளும் பத்திரம்.

**23. நீதி மன்றத்திற்கு தாக்கல் செய்ய வேண்டிய அறிக்கைகள்.**—சட்டத்தின் 8 மற்றும் 9-வது பிரிவின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையிலுள்ள நன்னடத்தையாளர்களின் நடத்தை, வாழ்வுமுறை மற்றும் முன்னேற்றம் பற்றிய குறிப்பிட்ட கால அறிக்கை அல்லது கால முறை அறிக்கை வழங்கும்படி நீதிமன்றம் நன்னடத்தை அலுவலரைக் கேட்டுக் கொள்ளலாம்.

**24. நன்னடத்தை அலுவலர்கள் பராமரிக்க வேண்டிய பதிவுருக்கள்**—(1) ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் கீழ்க்கண்ட பதிவுருக்களைப் பராமரிப்பார் :—

(அ) நாள்தோறுமான வேலை தொடக்க விசாரணைக் குறிப்புக்கள், நீதிமன்ற வருகை நாட்கள், நன்னடத்தையாளர்களின் சந்திப்புக்கள், சமூகத் தொடர்புகள், நிறுவனங்களைப் பார்வையிட்ட விவரங்கள் உள்ளிட்ட நாள் குறிப்பு, விதி 31-ன்படி ஒவ்வொரு வாரமும் நாள்குறிப்பின் படி ஒன்று மண்டல நன்னடத்தை அலுவலர் மூலம் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படும்.

(ஆ) நீதி மன்றங்களுக்கு தாக்கல் செய்துள்ள தொடக்க விசாரணை அறிக்கைகளின் படி அடங்கிய ஒரு கோப்பு.

(இ) விசாரணைகள் செய்யும் பொருட்டு நன்னடத்தை அலுவலருக்கு நீதி மன்றங்கள் அனுப்பிய ஆணைகளின் வரவு, அவற்றை முடித்த விவரம் அடங்கிய பதிவேடு.

(ஈ) படிவம் VII இன்படி நன்னடத்தையாளரின் வழக்குக் கோப்பு ( Case file ).

(i) நன்னடத்தையாளரின் வழக்கு மற்றும் அவரைப் பற்றிய விவரங்கள் அடங்கிய முகப்பு அட்டைப் பக்கம்.

(ii) நன்னடத்தையாளரின் நடத்தை, முன்நிகழ்ச்சிகள், குடும்பம். மற்ற சூழ்நிலைகள், குற்றம், மேற்பார்வையின் முன்னேற்றம் மற்றும் நன்னடத் தைக் கால முக்கிய தகவல்கள் ஆகியவற்றின் சுருக்கம்.

(iii) தண்டனை பெறுவதற்கு முன்னரேயிருந்த அறிக்கையின்படி, நீதிமன்றப் பத்திரம் அல்லது இதர பதிவுருக்கள் ஆகியவற்றின் படிகள் அவருடைய பூர்வாங்கச் செய்திகள் உள்பட.

(உ) நன்னடத்தையாளர் படிவம் VIII இன்படி ஒரு அட்டவணை அட்டை மற்றும் நீடித்த காலப் பதிவேடு.

(ஊ) நன்னடத்தையாளர்களுக்காக வழங்கப்பட்ட தொகை விவரம் அட்டை மற்றும் நீடித்த காலப் பதிவேடு.

(i) நன்னடத்தையாளர் பராமரிப்பிற்காக விதி எண் 31 இல் குறிப்பிட்டபடி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட தொகைகள்.

(ii) அந்த நிறுவனங்களுக்குப் போய்வர பயணச் செலவிற்கு நன்னடத்தையாளருக்கு வழங்கப்பட்ட தொகைகள்.

(iii) நன்னடத்தை அலுவலரைப் பார்க்கப் போக செலவழித்த கட்டணம்.

(vi) நன்னடத்தையாளருக்கான இதர நிதி உதவி ; மற்றும்

(எ) சிறைத்துறைத் தலைவர் அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அல்லது மண்டல நன்னடத்தை அலுவலரால் அவ்வப்பொழுது வரையறை செய்யப்படும் இதர பதிவுருக்கள்.

(2) உள் விதி (1)-ன் (ஆ), (இ), (ஈ) மற்றும் (ஊ) கூறுகளில் குறிப்பிட்டுள்ளபடி மதிப்புறு நன்னடத்தை அலுவலர்கள் தங்கள் பதிவுருக்களை, மண்டல நன்னடத்தை அலுவலரின் அலுவலகத்தில் பாாமரிப்பர்.

(3) உள் விதி (1) இன் (அ) மற்றும் (ஈ) கூறுகளில் குறிப்பிட்டுள்ள பதிவுருக்களை தனி மண்டல நன்னடத்தை அலுவலர் பாாமரித்து அவற்றை அவ்வப்பொழுது அரசு குறிப்பிட்டபடி மண்டல நன்னடத்தை அலுவலர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் ஆகியோருக்கு அனுப்புவார்.

25. **ஆய்வுப் புத்தகம்.**—ஒவ்வொரு நன்னடத்தை அலுவலரின் அலுவலகத்திலும் ஓர் ஆய்வுப் புத்தகம் பாாமரிக்கப்படும். அருகாமையிலுள்ள ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரின் அலுவலகத்தில் மதிப்புறு நன்னடத்தை அலுவலருக்குத் தொடர்புடைய ஆய்வுப் புத்தகத்தின் படி பாாமரிக்கப்படும், தலைமையகப் பொது ஆய்வாளரால் நியமிக்கப்படும் சிறைத்துறைத் தலைவர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர், மண்டல நன்னடத்தை அலுவலர் மற்றும் அதுபோன்ற இதர அலுவலர்கள் தங்களின் கருத்துரைகளை அதில் பதிவு செய்வர். நன்னடத்தை அலுவலரின் குறிப்போடு அவர்கள் கருத்துரைகள் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

26. **மண்டல நன்னடத்தை அலுவலர்களால் பாாமரிக்கப்பட வேண்டிய பதிவுருக்கள்.**—மண்டல நன்னடத்தை அலுவலர் தனது அலுவலகத்தில் சிறைத்துறைத் தலைவர் வரையறுத்துள்ளபடி கீழ்க்கண்டவற்றைப் பாாமரிப்பார் :—

(1) தன் அதிகார வரம்பின் கீழ் இருக்கும் நன்னடத்தை அலுவலர்களின் பட்டியல்.

(2) விதி 31-ல் கண்டுள்ளபடி அந்தப் பகுதியிலுள்ள நிறுவனங்களின் பட்டியல்.

(3) மாவட்டத்தில் மேற்பார்வையிலுள்ள ஒவ்வொரு நன்னடத்தையாளரின் வழக்கு பற்றிய சுருக்கம், முக்கியமான பத்திரங்களின் நகல்கள், வழக்கு அட்டை மற்றும் நன்னடத்தை அலுவலரின் குறிப்பு உள்ளிட்ட ஓர் பத்திரத் தொகுதி.

(4) அப்பகுதி நன்னடத்தை அலுவலரிடமிருந்து நன்னடத்தையாளர்களின் பதிவேடு (படிவம் IX)

(5) நன்னடத்தை அலுவலர்களின் ஆய்வைப் பற்றிய தகவல் அடங்கிய ஓர் ஆய்வுக் கோப்பு மற்றும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கு தாக்கல் செய்துள்ள அறிக்கைகளின் படிகள்.

(6) விதி 31 இன்படி அவர் அதிகார வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களில் தங்கியிருக்கும் நன்னடத்தையாளர்கள் குறித்த பதிவேடு.

(7) அவர் அதிகார வரம்பிற்குட்பட்ட நன்னடத்தையாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகைகள் குறித்த பதிவேடு.

(8) சிறைத்துறைத் தலைவரால் தேவைப்படுகிற இதர பதிவுகளின் பராமரிப்பு.

**27. மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களால் பராமரிக்கப்பட வேண்டிய நாள் குறிப்பு.**—தனது அன்றாட நன்னடத்தைப் பணியைப் பதிவு செய்து ஒவ்வொரு மதிப்புறு நன்னடத்தை அலுவலரும் ஒரு நாள் குறிப்பை பராமரிப்பர். மேற்படி நாள் குறிப்பு ஒவ்வொரு ஆங்கில ஆண்டின் இறுதியிலும் மாவட்ட நீதிபதிக்கு ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர் மூலம் அனுப்பப்படும். மேற்படி நாள் குறிப்பு ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலர், மண்டல நன்னடத்தை அலுவலர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் ஆகியோரின் ஆய்விற்கு உட்பட்டது.

**28. நாள்குறிப்பு, நன்னடத்தையாளரின் வழக்குக் கோப்பு ஆகியவற்றின் பராமரிப்பு.**—(1) நாள்குறிப்பு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் நாள் முடிக்கப்பட்டு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மந்தனக் கோப்பாக வைக்கப்படும்.

(2) முடிந்த நாளிலிருந்து 10 ஆண்டு காலம் வரை ஒவ்வொரு தொகுப்பும் பாதுகாத்து வைக்கப்படும்.

(3) நன்னடத்தையாளரின் வழக்குக் கோப்பு வெளியூர்களைப் பொறுத்தவரை, ஊதியம் பெறும் நன்னடத்தை அலுவலரின் அலுவலகத்திலும், சென்னை மாநகரைப் பொறுத்தவரை தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படும். நன்னடத்தை அலுவலர்கள் தாமதமின்றி தகவல்களை அதில் பதிவு செய்வர். மாவட்ட நீதிபதி, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் ஆகி

யோரின் ஆய்விற்கு இது உட்பட்டது. நன்னடத்தைக் காலம் முடிவுற்றபின் அவைகள் நம்பிக்கைக்குரிய பதிவுகளாகக் கருதப்பட்டு வெளியூர்களில் மாவட்ட நீதிபதி அலுவலகத்திலும் சென்னை மாநகரத்தில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் வைக்கப்படும்.

(4) மேற்பார்வைக் காலம் முடிவு பெறும் நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஒவ்வொரு நன்னடத்தையாளரின் வழக்குக் கோப்பும் பாதுகாத்து வைக்கப்படும்.

(5) அட்டவணை அட்டையும் காலவரிசைப் பதிவேடும் நன்னடத்தையாளரின் கோப்பு அழிக்கப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டு காலத்திற்குக் குறையாமல் பாதுகாத்து வைக்கப்படும்.

**29. நீதிமன்றப் பதிவுகள்.**—தனது கடமைகளை உரிய காலத்தில் செய்ய நீதிமன்றப் பதிவுகளை பார்வையிட்டு, அணுகி, ஆவன செய்ய, நன்னடத்தை அலுவலர் உரியவராவார். தனது கடமைகளை நிறைவேற்ற, பதிவு செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் அறிக்கைகளிலிருந்து குறிப்புகள் ஆகியவற்றை அவர் எடுக்கலாம். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் சான்றுகளின் செய்திகளை நீதிமன்றத்தின் குறிப்பிட்ட ஆணை இல்லாமல் யாருக்கும் தெரியப்படுத்தமாட்டார்.

**30. தனி நன்னடத்தை அலுவலர்கள்.**—தனி நன்னடத்தை அலுவலர்கள், மதிப்புறு நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கைகள் மற்றும் பதிவுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு தங்கள் பணிக்குத் தேவையானவற்றைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**31. நன்னடத்தையாளர்களை வரவேற்க உள்ள நிறுவனங்கள் அல்லது இதர அமைப்புகள்.**—(1) ஒரு மேற்பார்வை ஆணையின் கீழ் மாநில அரசு நிருவாகம் மற்றும் ஆய்வு சம்பந்தப்பட்ட தன்மைகள் உட்பட எந்த நிறுவனத்தையோ, அமைப்புக்களையோ தேவையான நிபந்தனைகளின் பேரில் அங்கீகரிக்கலாம் அல்லது பராமரிக்கலாம். அந்நிறுவனங்களில் நன்னடத்தையாளர்கள் வரவேற்கப்படுவார்கள்.

(2) அதுபோன்ற நிறுவனங்கள் மற்ற அமைப்புக்கள் அவ்வப்பொழுது மாநில அரசால் ஏற்படுத்தப்படும் ஆணையின் அடிப்படையில் பராமரித்து நிருவகிக்கப்படும்.

**32. மேற்கண்ட நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களில் நன்னடத்தையாளரின் உறைவிடம்.**—(1) விதி 31 இன்படி நன்னடத்தையாளர் தங்குவதற்கு நிரந்தரமான இடம் இல்லாத நிலையிலோ அல்லது மேற்பார்வைக்கு

பொருத்தமான இடம் இல்லை என்றாலோ நன்னடத்தை நோக்கம் நிறைவேற்ற குடும்பச் சூழல் ஏதுவாக இல்லையென்றாலோ இதுபோன்ற அமைப்புக்களில் தங்குவதால் நோக்கம் நிறைவேறும், எனில் நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தையாளர்களைத் தங்கச் செய்யலாம்.

(2) நன்னடத்தையாளர் செய்து கொண்ட ஒப்பந்தப் பத்திரப்படி, நீதிமன்ற ஆணையின் நிமித்தம் ஒரு நன்னடத்தையாளர் மேற்கண்ட நிறுவனங்களில் தங்க நேரிடலாம்.

33. இருப்பிட மாற்றம்.—(1) மேற்பார்வை உத்திரவின் தன்மைகளை பார்வையிலுள்ள ஒரு நன்னடத்தையாளர் இடம் மாறினாலோ தன்னுடைய இருப்பிடத்தை மாற்ற முயன்றாலோ மேற்படி இடம் நன்னடத்தை அலுவலரின் பகுதிக்கு அப்பாற்பட்டதாக இருந்தால் கீழ்க்கண்ட அனுமதிகளை நன்னடத்தையாளர் பெறவேண்டும் :—

(அ) தங்கவேண்டிய நாட்கள் 15-க்கு மேல் இருந்தால் நன்னடத்தை அலுவலரின் அனுமதி.

(ஆ) தங்கவேண்டிய நாட்கள் 15 நாட்களுக்கு மேற்பட்டு ஆனால், மூன்று மாதத்திற்கு மேற்படாமல் இருந்தால் நன்னடத்தை அலுவலரின் பரிந்துரையின் பேரில் மண்டல நன்னடத்தை அலுவலரின் அனுமதி.

(இ) காலம் மூன்று மாதத்திற்கு மேற்பட்டால் நன்னடத்தை அலுவலர் மூலம் விண்ணப்பித்து நீதிமன்றத்தின் அனுமதி.

(2) உள் விதி (1) இன்படி தங்கவேண்டிய நாட்கள் 15 (பதினைந்து) க்கு மேற்பட்டால் நன்னடத்தையாளர் மாறியிருக்கும் இடத்தின் பராமரிப்பில் உள்ள நன்னடத்தை அலுவலரிடம் குறிப்பிட்ட நாளுக்குள் தெரிவித்தல்.

(3) மாறியிருக்கும் இடத்தில் நன்னடத்தை அலுவலர் நன்னடத்தையாளர் வந்திருக்கும் விவரத்தை முன்பு இருந்த பகுதியின் நன்னடத்தை அலுவலருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்துவதுடன், மேற்படி அறிக்கையின் படிகளையும் இதுபோன்ற மற்ற அறிக்கைகளையும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தேவைக்கேற்ப மாவட்ட நீதிபதி அல்லது தொடர்புடைய மாவட்ட நீதிபதிகளுக்கும் மற்றும் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும் அனுப்புவார்.

(4) உள் விதி (1)ல் குறிப்பிட்டுள்ளபடி தங்கும் நாட்கள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டால் சட்டத்தின் 13 ஆவது பிரிவு, உட்பிரிவு (2) இன் கீழ் மாறியிருக்கும் பகுதியில் மாவட்ட நீதிபதியால் ஒரு புதிய நன்னடத்தை அலுவலர் நியமிக்கப்படுவார்.

**34. இச்சட்டம் செயல்படும் முறை பற்றிய அறிக்கை.**—இச்சட்டம் செயல்படும் முறை பற்றி ஒவ்வொரு மார்ச் மாதம் முதல் நாளன்று, டிசம்பர் 31-ல் முடிவுறும் ஒவ்வொரு ஆண்டுக்குரிய அறிக்கையை கீழ்கண்ட விவரங்களுடன் சிறைத்துறைத் தலைவர் அரசுக்கு அளிப்பார்:—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நன்னடத்தை அலுவலர்கள் பட்டியல், (மதிப்புறு நன்னடத்தை அலுவலர்கள் உள்பட) அவர்களின் ஊதியம் மற்றும் பிற செலவினங்கள்.

(ஆ) மாவட்டத்திலுள்ள நன்னடத்தை அலுவலர்களின் மேற்பார்வையில் உள்ள நன்னடத்தையாளர்கள்.

(இ) சட்டத்தின் 13 ஆவது பிரிவின் உட்பிரிவு (1) இன் (இ) கூறின்படி ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள மதிப்புறு நன்னடத்தை அலுவலர்கள் மற்றும் அத்தகைய அலுவலர்களின் மேற்பார்வையில் உள்ள நன்னடத்தையாளர்கள்.

(ஈ) அரசால் குறிப்பிடப்படும் இதுபோன்ற அவ்வப்போது தேவைப்படும் இதர விவரங்கள்.

குறிப்பு.—இவ்விதியின் நோக்கம் நிறைவேறுவதற்காக மாவட்ட நீதிபதிகளிடமிருந்து சிறைத்துறைத் தலைவர் விவரங்களைக் கேட்டறிவார். மாவட்டத்திலுள்ள நன்னடத்தை அலுவலர்கள் அவர்களது அதிகார எல்லைக்குள் எவ்வாறு பணியாற்றுகிறார்கள் என்பதைப் பற்றி அவர்களின் குறிப்புகளை ஒவ்வொரு அரையாண்டும் அதாவது ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் கேட்டறிவார்.

**35. நன்னடத்தை அலுவலர்கள் நன்னடத்தையாளர்களை வேலை வாங்கக் கூடாது.**—ஒரு நன்னடத்தை அலுவலர் தனது மேற்பார்வையில் இருக்கும் தவறு செய்த ஒருவரை எந்தவிதமான தனது சொந்த வேலைக்கோ பிற வேலைக்கோ பயன்படுத்தக்கூடாது.